# குறள்நெறி

குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்
நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்
மின்னிதழ் 16 | ஆடி 31, தி.பி 2052 | ஆகத்து 16, பொ.ஆ 2021

சிறப்பாசிரியர் குழு
முனைவர் பொற்கோ
(முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்)

முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்)

முனைவர் இர.பிரபாகரன்
(மேரிலாந்து,அமெரிக்கா)

முனைவர் அன்புசெயா
(சிட்னி,ஆத்திரேலியா)

பாவலர் முரசு நெடுமாறன்
(மலேசியா)

பேராசிரியர் மன்னர்மன்னன்
(மலேசியா)

பேராசிரியர் பெஞ்சமின் லெபோ
(பிரான்சு)

கவிஞர் அழ.பகீரதன்
(இலங்கை)

பொறியாளர் ச.இராசகுமாரன்
(அயர்லாந்து)

திரு.எலியாசு
(சிங்கப்பூர்)

திருமதி.மதிவதனி பத்மநாதன்
(சுவிட்சர்லாந்து)

திருமதி.தாமரை சீனிவாசராவ்
(கம்போடியா)

திரு.ஞானமுருகன்
(இங்கிலாந்து)

முனைவர் இராம சுந்தரம்
(கொரியா)



அறுபது ஆண்டுகளாகக் குறள்நெறிப் பரப்புரை
நிகழ்த்திவரும் பட்டிமன்றவேந்தர்

## பேராசிரியர் கண.சிற்சபேசன்

(கட்டுரை உள்ளே)

*இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு* *விற்பனைக்கு அல்ல.*

# திருக்குறள் பட்டிமன்ற வரலாறு - தொடர்கட்டுரை

-பேராசிரியர் கண.சிற்சபேசன்

## சமயம் நல்ல பாதையா? பொல்லாத போதையா?

நிகழ்ச்சி ஏற்பாடு: **பெரியார் பாசறை**

இடம்: **இம்மையில் நன்மைதருவார் திருக்கோயில் திடல் - மதுரை**



*முதுபெரும் பேராசிரியர் கண.சிற்சபேசன் அவர்கள் நம் குறள்நெறி இதழின் நிறுவனர் செந்தமிழ் அரிமா சி.இலக்குவனார் அவர்களுடன் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றியுள்ளார். பட்டிமன்றப் பொழிவில், அறுபதுகளில் கோலோச்சிவந்த பேராசிரியர் கண.சிற்சபேசன் அவர்கள் திருக்குறள் தொடர்பான பட்டிமன்றங்களின் வரலாறு குறித்து இத் தொடர்கட்டுரையைத் தொடர்ந்து குறள்நெறி இதழில் வழங்கிவருகிறார். கடந்த அறுபது ஆண்டுகளாகப் பட்டிமன்றத்தின் மூலமும் தமது பொழிவுகளின் மூலமும் வள்ளுவன் குறளை வையகமெங்கும் பரப்பிவரும் முதுபெரும் பேராசிரியர் கண.சிற்சபேசன் அவர்களின் படம் நம் குறள்நெறி இதழின் முகப்பை அணிசெய்கிறது.*

இது எனக்கு மிகவும் சோதனையான தலைப்பு. ஆம் மதுரையில் மூலைக்கு மூலை, மூளைக்கு-மூளை, இலக்கியப் பட்டிமன்றங்கள் நடைபெற்ற காலமது. (கால+மது, உண்மை, ஏனென்றால் எங்களது பட்டிமன்றகள் காசு பணம் செலவிலாமல் மக்களுக்குக் கிடைத்த மது; தமிழமுது). ஆனாலும் அவை பெரும்பாலும் கோயில் வளாகங்களில் நடைபெறுவது வழக்கம். சமயத் தொடர்பான பட்டிமன்றங்களும் அதிக அளவில் நடக்கும். ஆனால் இதுபோலச் சமய நம்பிக்கைகளை அசைத்துப் பார்க்கும் வகையில் பட்டிமன்றங்கள் நடைபெறுவது குறைவு. இவற்றில் பேசுவது தொல்லை என்பதைவிடப் பேசிமுடித்த பிறகு நாங்கள் எதிர்கொள்ளும் விளைவுகள் இடர் தருவன. பேசிமுடித்து வந்த பிறகு நாங்கள் பணியாற்றும் கல்லூரிகளுக்குப் புகார்க் கடிதங்கள் வரும். கல்லூரி முதல்வர் எங்களை அழைத்து விசாரணை நடத்துவார். எனக்கு அதுபோல வந்து பேராசிரியர் சி.இலக்குவனார் ஐயா தான் காப்பாற்றினார். எதைப் பேசினாலும் நன்றாகப் பேசவும் அந்த வழியில் தெளிவாகச் சிந்திக்கவும் திறமையுடைவராக இந்த இளைஞர் தன்னை வளர்த்துக் கொள்ளும் பயிற்சிதானே இது, இதில் ஒன்றும் பிழையில்லை என்று என்னைக் காப்பாற்றினார் ஐயா அவர்கள். அப்போது நான் இளைஞன்.

சமயம் நல்ல பாதையே என்ற அணியில் மதுரைக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் சவுமியநாராயணன். சமயம் பொல்லாத போதையே என்ற அணியில் பேராசிரியர் இளமாறன். முன்னவர் ஆழ்வார்கள் வளர்த்த வைணவ சமயத்தில் மூழ்கியவர்; பின்னவர் பெரியாரின் கொள்கையில் ஊறியவர். தனது மகனின் திருமணத்தைத் திராவிட இயக்கத்தலைவர் வீரமணி ஐயாவின் தலைமையில் நடாத்தியவர். இது ஒப்புக்கு நடக்கும் பட்டிமன்றம் என்று நினைக்காமல் இரு கொள்கையினரும் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். அன்று தலைநோய் வருத்தம்

தன்மேலிட்டுக்கொண்டு போகாமல் இருக்கத்தான் நினைத்தேன். ஆனால் இதை எப்படியோ மோப்பம் பிடித்த நிகழ்ச்சியின் அமைப்பாளர் நாகராசன் முதல் நாளே என்வீட்டில் குடியேறிவிட்டார்- குடி ஏறாத அந்த நல்ல மனிதரை ஏமாற்ற மனமின்றி குறிப்பிட்ட நேரத்தில் என் வீட்டில் நான் சுவரில் அருகருகே மாட்டியிருந்த சுவாமி விவேகானந்தர், பெரியார் படங்களுக்கு ஊதுவத்தி ஏற்றி வைத்து "தெய்வமே" என்று வணங்கிவிட்டு வண்டி ஏறினேன். என் மனைவியார் இரக்கத்தோடு பார்த்தார்கள். ஏதோ "உன் சீறடிச் சிலம்பில் ஒன்று கொண்டு யான் போய் மாறி வருவன், மயங்காது ஒழிக" என்று சொல்லி நான் விடைபெறுவது போலவும் அவர் கண்ணகி போலவும் என்னுடைய இல்லப் பணிமூதாட்டி இடைக்குல மடந்தை மாதரி போலவும் காட்சியளித்தனர்.

பட்டிமன்ற மோதலைப் பார்க்கவும் கருத்துக்களைக் கேட்கவும் பெருங்கூட்டம் கூடி(குடி)யிருந்தது அந்த 'இம்மையில் நன்மைதருவார் திருக்கோயில்' திடலில். முதல் அணியினருக்குப் பிற்புலத்தில் திருப்பதிப் பெருமாளின் படமும் மறு அணியினரின் பிற்புலத்தில் பெரியாரின் படமும் அமைக்கப்பட்டிருந்தன. எனக்குப் பின்னே தூய வெண்துணி கட்டப்படிருந்தது. ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருந்தது.

நாங்கள் மேடையேறி அமர்ந்தபோது கைதட்டல் ஒலி விண்ணைப் பிளந்தது. அமைப்பாளர் நாகராசன் மேடையேறி "முதலில் கடவுள் வாழ்த்துடன் பட்டிமன்றத்தைத் தொடங்குவோம்" என்று சொன்னவுடன் ஒரு பக்கம் அமர்ந்திருந்த கருஞ்சட்டை வீரர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். "கடவுள் வாழ்த்து பாடக் கூடாது" என்று கூவினர். மறு பக்கம் அமர்ந்திருந்த வெண்ணீறுகளும் திருமண்களும் "அவசியம் பாடவேண்டும்" என்று முழங்கினர். அமைப்பாளர் நாகராசன் மிகத் திறமைசாலி.

"இதை நடுவர் ஐயாவின் முடிவுக்கே விட்டுவிடுவோம்" என்றதுடன் நில்லாமல் "இது நடுவர் ஐயாவின் முடிவு" என்று மிக அழுத்தி சொல்லிவிட்டுச் "சரிதானே"? என்று கேட்க இரு சாராரும் உடன்பட்டனர். உடனே நான் "பெரியோர்களே! தாய்மார்களே! இறை நம்பிக்கை உடையவர்கள் இறைவனை நினைந்து ஒரு மணித்துளியும் மற்றையோர் உலக நன்மை கருதி ஒரு மணித்துளியும் எழுந்து நின்று அமைதியாக வணங்குவோம்" என்று சொல்லியபடி நான் முதலில் எழுந்து நின்றேன். அவ்வளவு பேரும் எழுந்து நின்றோம். "நன்றி எல்லோரும் அமரலாம், அமரர் ஆகலாம்" என்றேன். அப்போது அமைப்பாளர் நாகராசன் என் காதைக் கடித்தார்: 'ஐயா இன்றைய நமது நிகழ்ச்சியின் புரவலரின் பேத்தி கடவுள் வாழ்த்துப் பாடல் பாடத் தயாராக இரண்டு மணி நேரமாக ஒப்பனையோடு காத்துக்கிடக்கிறாள்; அவள் பாடவில்லயென்றால் ............! உங்களுக்குப்பரிசுத்தொகை நாமந்தான்.....

மேடையின் பின்புறம் நின்றுகொண்டிருந்த அந்தப் பெண்ணை அருகில் அழைத்து "என்ன பாடல் பாடப் போகிறாய்" ? என்று கேட்டேன். அவள் என் வயிற்றில் பால் வார்த்தாள். "உன் பெயர்"? "வாசுகி".

நான் ஒலி பெருக்கியில் "இப்போது செல்வி வாசுகி சில குறட்பாக்களை இசையொடு பாடுவாள்" என்று சொன்னேன். உண்மையில் அந்தக் குழந்தை திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரப் பாடல்களை அழகாக இசையோடு பாடினாள். அவள் பாடி முடித்தபோது மொத்தக் கூட்டமும் கைதட்டியது. நான் நினைத்துக்கொண்டேன் "கடவுள் வெற்றிபெறக் கூடத் திருவள்ளுவரின் தோன்றாத்துணை வேண்டியிருக்கிறது" என்று.

வாதங்கள் தொடங்கின, சீனி சவுமிய நாராயணன் தமது வாதங்களை மிக ஆவேசமாக எடுத்துரைத்தார். சமயம் என்றால் வழி என்று பொருள். சமைக்கப்படுவது என்றால் செம்மையாக வடிவமைக்கப்படுவது என்று பொருள். அதனால்தான் உணவைக் கூடச் சமைத்தல் என்ற சொல்லால் அழைக்கிறோம். சிற்பி சிலை சமைத்தான் என்கிறோம். ஒரு பெண் பருவம் அடைந்தால் சமைந்தாள் என்று இன்றும் சொல்கிறோம். மதம் வேண்டுமானால் சரிவுகளைச் சந்தித்து இருக்கலாம். ஆனால் சமயம் ஒருகாலும் அப்படிச் சந்தித்ததில்லை. சந்தித்த+தில்லை. சமயம் மக்கட் சமுதாயத்துக்குக் கேடு செய்யவும் செய்யாது. அதிலும் தமிழகத்தில் தோன்றிய இரு பெருஞ்சமயங்களும் கடவுள் நம்பிக்கையோடு நிற்காமல் நல் ஒழுக்கம், அன்பு, அருள், சமத்துவம் ஆகிய நன்னெறிகளை மக்களுக்கு உணர்த்துகின்றன. இவற்றைப் போலவே வடக்கே தோன்றிய ஆசீவகம், சமணம், புத்தம் போன்ற சமயங்களும் கடவுள் நம்பிக்கையை முன்னிறுத்தாமல் மானுடப்பண்புகளை மட்டும் முன்னிறுத்துகின்றன. ஒன்றே ஒன்றை எதிரணித் தலைவரைக் கேட்கிறேன் புலால் மறுப்பது, பொய்கூறாமை, களவுசெய்யாமை, கொலை செய்யாமை, கள்ளுண்ணாமை ஆகியவற்றில் என்ன தெய்வ நம்பிக்கை இருக்கிறது? என்ன சமய வழிபாடு இருக்கிறது என்று அவர் சொல்லட்டும். இது தான் வள்ளுவர் காட்டும் தமிழர் சமயம். சைவ சமயத்தை வளர்த்த திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர். சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும், பன்னிரு ஆழ்வார்களும் மக்களுக்கு வழங்கிய சமயநெறி மக்களை நல்வழிப்படுத்தியது. இவர்களுக்கெல்லாம் முன்னோடியாகிய நமது திருவள்ளுவர் “கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன், நற்றாள் தொழார் எனின்” என்று சொல்லியுள்ளாரே? எதிரணித் தலைவரிடம் உள்ள பிரதியில் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரம் இல்லையோ? அதில் என்ன பொல்லாத போதை இருக்கிறது? மனிதனை ஆணை, பெண்ணை, மன்னனை, அமைச்சனை இவர்களை நல்வழிப்படுத்த; இவர்களுக்கு எல்லாம் மேலான ஒரு வழி இருப்பதாகச் சொல்லி அந்த நெறிக்குச் சமயம் என்று பெயர் இட்டனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் மக்கள் அறிந்த நமது உயிரினும் மேலான தமிழ் மொழியில் சமயத்தைப் பரப்பினர். ‘இசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்’ என்று பாராட்டப்பெற்றார். சமயத்தைப் பரப்புவதின் வழியாக வாழ்க்கைக்கு நல்வழி காட்டினர். இது இப்போது எனது நண்பர் இளமாறனுக்கு தெரியாது. முதுமாறன் ஆனால் புரியும். இப்போதைக்குப் போதை மட்டும்தான் தெரியும். இவருக்காகத்தான் எங்கள் ஆழ்வார்கள் ‘அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் அரங்க மாநகருளானே’ என்று பாடியுள்ளார்கள்” என்று கேலியுடன் முடித்தார்.

அவர் பேசி முடித்தபின் பெருமாள் கோவில் அர்ச்சகர்கள் மேடையேறி மந்திரம் முழங்கி அவரை வாழ்த்தித் துளசியும் நீரும் அளித்துத் திருவடி சாத்தினர்.

கூடவே பெரியார் தொண்டர்கள் மேடையேறி இளமாறனுக்கு கருப்புத் துண்டு போர்த்திச் சிறப்புச் செய்தனர். எனக்கு இரண்டும் கிடைத்தன.

அடுத்துப் பேராசிரியர் இளமாறன் தனது அணியின் வாதங்களைத் தொடங்கினார்.

“எதிர்க்கட்சித் தலைவர் எனது இனிய நண்பர். சவுமியநாராயணனின் வாதம் எதையும் நான் மறுத்து எனது நேரத்தையும் உங்கள் நேரத்தையும் நடுவர் அவர்களின் பொன்னான நேரத்தையும் வீணாக்கப் போவதில்லை. ஏனென்றல் அவரது வாதங்கள் எல்லாம் உண்மை. எங்களுக்கு அதில் கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் எங்கள் வாதம் எல்லாம் இதுதான். மனித இனத்துக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்து

எல்லாச்சமயங்களும் தம்மைத்தாம் வளர்த்துக்கொள்கின்றன. சமயமும் சமயத் தலைவர்களும் தமது ஆதாயத்தைப் பெருக்கவே ஆகாயத்தில் இறைவன் இருக்கிறான் என்ற மயக்கத்தை மக்களுக்கு ஊட்டுகின்றனர். ஒட்டுமொத்த மனித வாழ்க்கைக்குத் தேவையற்ற வேட்கையை அவனுக்குள்ளே புகுத்திச் சமயப் பூசல்களையும் போர்களையும் உண்டாக்கின. இதனால் இவ்வுலகில் ஓடியது குருதி ஆறு என்பது உறுதியான வரலாறு(வரல்+ஆறு). மேலும் சமயம் ஒரு தேவையற்ற வீண் செலவு என்று நான் கூறுவேன். நமது நாட்டில் தோன்றியுள்ள கோயில்கள் எத்தனை கோடிப் பணத்தை வீணாக விழுங்கியுள்ளன. சமய வழிபாடு செய்வதில் எத்தனை கோடி மக்கள் தங்கள் நேரத்தையும் பொருளையும் தினமும் வீணடிக்கின்றனர்? அதில் அவர்களுக்கு ஒரு வெறியும் போதையும் உண்டே? போதை என்பதை எதிரணித் தலைவர் அறிவாரா? நான் அறிவேன்". கூட்டத்தில் ஆரவாரம். அவர் தொடர்ந்தார்: "நேற்றுக் குடித்துப் போதை ஏறிய ஒருவனுக்கு இன்று அதே நேரம் வந்தவுடன் கை அரிக்கிறதே, மனம் ஏங்குகிறதே அதற்குப் பெயர்தான் போதை. இதனால் தான் 'சமயம் ஒரு வகை மது' 'Religion is an opium' என்று வெளிநாட்டு பகுத்தறிவுவாதி ஒருவர் சொன்னார்". சரியாக இந்த நேரத்தில் ஒரு பையன் 7 அல்லது 8 தேநீர்க் குவளைகளைக் கம்பித் தூக்கில் சுமந்தபடி வந்தவன் எங்கள் எல்லோருக்கும் தந்ததுடன் பேசிக்கொண்டிருந்த இளமாறனுக்கும் ஒரு குவளை கொடுக்க கைதட்டலுக்கா பஞ்சம்?

இளமாறன் சவுமிய நாரயணனை அணியினிரைப் பார்த்துச் சொன்னார் "எதிரணி நண்பர்களே நாம் எல்லோரும் குடித்துப் பழகுவோம் இன்றிலிருந்தாவது, நமது நடுவர் தலைமையில்". இப்போது கைதட்டல் மழையே பொழிந்தது. புரிந்ததோ புரியவில்லையோ தேநீர் கொடுத்த பையனும் சேர்ந்து கைதட்டி ஆரவாரித்தான்.

இளமாறன் தொடர்ந்தார், "சைவ நாயன்மார்கள் சிலரும் வைணவ அடியவர்கள் சிலரும் திருடியும் வழிப்பறி செய்தும் பொருள் பறித்துச் சமய வழிபாடு செய்தனர் என்று வரலாறு பேசுகிறதே? இப்படி எல்லாம் பார்க்கும்போது இவ்வாறு தீமை செய்யத் தூண்டும் சமயம் நல்ல பாதையல்ல பொல்லாத போதையே" என்று கூறித் தனது வாதங்களை முடித்தார்.

இப்போது எனது தலைவலி தொடங்கியது. "இரு அணியினரும் உண்மையே பேசியுள்ளனர். எந்த அணிக்கு என்று தீர்ப்பு வழங்குவது? திருவள்ளுவரது நூல் தவிரத் துணையேது? அவரது கடவுள் வாழ்த்து அதிகாரம் எனக்கு கைகொடுத்தது. அதில் அவர் கண்ணுக்குத் தெரியாத கடவுளை அவளி/ரி/ன் குணம் என்ற பண்பு வழியாக விளக்குகிறார். 'ஆதி பகவன்' என்று எல்லா உலகங்களுக்கும் முன்னோடி என்றும்; 'வாலறிவன்' என்று தூய அறிவின் வடிவம் என்றும்; 'மலர்மிசை ஏகினான்' என்று நமது மனங்களாகிய மெல்லிய மலர்களின் மீது நடக்கிறவன் என்றும் (கவனியுங்கள், வலிய மனங்களின் மீது அவன் நடக்கமாட்டான்); 'வேண்டுதல் வேண்டாமை இலாதான்' என்று அவனுக்கு விருப்பு வெறுப்பு இவை இல்லை என்றும்; 'தனக்கு உவமை இல்லாதான்' என்று அவனே அவனுக்கு உவமை என்றும், 'எண் குணத்தான்' என்று எண்ணும் குணங்கொண்டவன் என்றும் கடவுளின் தன்மையைக் கூறுகின்றார்.

இதற்குக் காரணம் என்ன? இல்லாத கடவுளைப் பற்றி ஆராய்ச்சி ஏன்? மனிதனுடைய அறிவு இடையறாது சிந்திக்கும் திறங்கொண்டது. அதை நீங்களோ நானோ கட்டுப்படுத்தமுடியாது. நிலம், நீர், விண், நெருப்பு, காற்று இவற்றின் இயக்கத்தை ஆராய்ந்த ஆதி மனிதன் இவை பயன்கள் என்றால் இவற்றை படைத்த கருமான் ஒருவன் இருத்தல்வேண்டுமே என்று ஆராய முயன்றார்கள். என் மனைவி

மக்கள் எல்லோரும் வெளியே போயிருக்கிறார்கள். நான் வீட்டைத் திறந்து உள்ளே போகிறேன். அங்கே உணவு மேடையில் பால் ஒரு குவளையில் ஊற்றி வைக்கப்பட்டிருக்கிறது. பால் பயன். அதை பார்த்தவுடன் அதை அப்படி எனக்காக வைத்து சென்றிருப்பவர் எனது மனைவியார் என்று அறிந்து கொள்கிறேன். அவர் செய்தவளாகிய கர்த்தா. இப்படித் தான் கடவுட் கொள்கை தமிழர்களால் ஆராயப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாகத் திருவள்ளுவரால் முழு ஆய்வு மேற்கொள்ளப் பெறுகின்றது. அவரது கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் கடவுளின் பண்புகளைக் கூறுவதுடன் மனிதப் பண்புகளையும் சொல்கிறார். ‘கற்றதனால் ஆயபயன்’ என்று கல்வியின் பயனையும்; ‘பொறிவாயில் ஐந்தவித்தான்’ என்று புலனடக்கத்தின் ஆற்றலையும், ‘பிறவிப் பெருங்கடல் நீந்துவர்’ என்று இந்த உலகத்தில் பிறந்த துன்பநீக்கத்திற்கு வழி பக்தி என்றும் மனிதப் பண்புகளை விரிவாக ஆராய்கின்றார்.

திருடியும் சூதாடியும் பொருள் சேர்த்து சமயத் தொண்டாற்றிய அடியவர்களைப் பற்றி நண்பர் இளமாறன் சொன்னார். அவர்களை நமது சமய நூல்கள் பாராட்டியிருந்தாலும் திருவள்ளுவர் கண்கொண்டு பார்க்கும் நான் பாராட்ட மாட்டேன். காரணம் ஒரு செயலின் பயன் மட்டும் நன்மையாக இருந்தால் போதாது. செல்லும் வழியும் அறவழியாக இருக்கவேண்டும். ஆகவே அவர்களை நாம் ஒதுக்கிவிடுவோம்.

நமது நாட்டிலுள்ள கோயில்கள் கோடிக்கணக்கான பொருட்செலவை வீணாக்கியுள்ளன என்றும் அவர் சொன்னார். ஆனால் அன்றைய நிலையில் கோயில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் விளங்கவில்லை. நமது கலை பண்பாட்டு மையங்களாகவும் விளங்கின. அதனுடன் அவற்றையொட்டிப் பல்துறைத் தொழில்களும் வளர்ந்தன. அதனால் கோயில் கட்ட ஆகிய தொகை மூலதனமே தவிரச் செலவாகாது.

இப்போது ‘சமயம் நல்ல பாதையா? பொல்லாத போதையா’? என்று ஆராய்வோம். சமயப் போர்கள் மனித சமுதாயத்துக்குக் கேடு விளைத்தன என்ற கூற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அது சமயவாதிகளின் கொடுமையே தவிரச் சமயங்களின் குற்றமன்று. சமயம் கூற்றமும் அன்று. அதேபோல சமயங்கள் மக்களுக்கு நம்பிக்கையை விதைக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் சமயப் பற்றில்லாத பகுத்தறிவாளன் கூடப் பலவற்றில் நம்பிக்கை வைக்கிறானே? மரத்திலிருந்து விழுகிறவன் தொங்கும் கொடியைப் பற்றிக்கொள்கிறானே? .

ஆகவே நான் இப்படி நினைத்துப் பார்க்கிறேன். கற்பனைக்காவது சமயவாதிகளும் நாத்திகர்களும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து பாருங்கள். சமயவாதிகள் சமயங்களைப் புறக்கணிப்பவர்களாகவும், நாத்திகர்கள் சமயத்தை விரும்புகிறவர்களாகவும் ஓராண்டு வாழ்ந்து பார்த்துவிட்டு வாருங்கள். அடுத்த ஆண்டு எனது முடிவான தீர்ப்பை வழங்குகிறேன்; நான் முடிவாகாமல் இருந்தால்” என்று கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தேன்.

# மானம்

- நாவலர். ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ. பி.எல்.

*ச. சோமசுந்தர பாரதியார் (சூலை 27, 1879–1959, திசம்பர் 14; எட்டயபுரம், தமிழ்நாடு) என்னும் நாவலர் சோமசுந்தர பாரதியார் சிறந்த தமிழறிஞர் ஆவார். இவர் பல பாடல்களையும் நூல்களையும் எழுதியதோடு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயலாற்றியவர். மதுரை மாவட்டத்தின் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் தலைவராகவும் செயற்பட்டவர். சோமசுந்தர பாரதியார் 1905 ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் வழக்கறிஞராகத் தொழிலாற்றத் தொடங்கியபொழுது, அங்கே விடுதலைப் போராட்டம் கனன்றுகொண்டிருந்தது. அப்போராட்டத்தால் சோமசுந்தர பாரதியாரும் ஈர்க்கப்பட்டார். இந்திய தேசிய காங்கிரசு இயக்கம் நடத்திய பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். இதனால் 1905ஆம் ஆண்டு முதல் 1919 ஆம் ஆண்டு வரை அவரது பெயர் அரசினரின் ஐயப்பாட்டு பட்டியலில் இடம்பெற்று இருந்தது.*

*வ. உ. சிதம்பரம் பிள்ளையின் அழைப்பை ஏற்றுக்கொண்டு சோமசுந்தர பாரதியார் “இண்டியன் நேவிகேஷன்” என்னும் சுதேசி கப்பல் கம்பெனியின் செயலாளராக இருந்தார்.*

*மதுரையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் மாநாட்டினைக் கூட்டி அதன் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். சித்தரஞ்சன் தாசை மதுரைக்கு அழைத்து, சொற்பொழிவாற்றச் செய்தார்.*

*1937ஆம் ஆண்டில் இராசகோபாலாச்சாரியார் சென்னை மாகாண முதலமைச்சராகப் பதவியேற்றபோது உயர்நிலைப் பள்ளிகளில் முதல் மூன்று படிவங்களில் (6, 7, 8 ஆம் வகுப்புகளில்) இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்பட்டது. தாய்மொழியைத் தவிர்த்து வேற்று மொழியைத் திணிக்கக் கூடாதென்ற கருத்தால் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை நாவலர் உருவாக்கினார்.*

*1937 செப்டம்பர் 5 ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்றார். அக்டோபர் 25 ஆம் நாள் கட்டாய இந்திக் கல்வியை கைவிடக் கோரி, அன்றைய முதலமைச்சர் ச. இராசகோபாலாச்சாரியருக்கு திறந்த மடல் (An Open Letter to Honourable Minister C. Rajagopalachariar)ஒன்றை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார்.*

*இளமையிலேயே தமிழிலக்கியத்தில் ஈடுபாடுகொண்டிருந்த சோமசுந்தர பாரதியார், பின்னாளில் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டார். தனது ஆராய்ச்சிகளைச் சொற்பொழிவின் வழியாகவும் ஆய்வுநூல்கள் எழுதுவதின் வழியாகவும் வெளியிட்டார்.1932–33 ஆம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்தார்.*

*திராவிடர் கழகம் கம்பராமாயணத்தை எரிக்க வேண்டும் என இயக்கம் நடத்தியது. அதன் ஒருபகுதியாக நடைபெற்ற பட்டிமன்றத்தில் சோமசுந்தர பாரதியார் கலந்துகொண்டு கம்பராமாயணத்தை எரிக்கக் கூடாது என அறிஞர் அண்ணாவுடன்வாதிட்டார். 1998ஆம் ஆண்டு இவரது நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன.*

---

மானம் என்பது மக்கள் தன்மதிப்பு, அதாவது சுயமரியாதை. என்றும் தன்மதிப்புக் குன்றாது பேணும் இயல்பு அல்லது பண்பு. மானம் அல்லது தன் மதிப்புக் குறைய மக்கள் வாழப் பொறார். 'மானம் அழிய உயிர் காவலா?' -என்பது தமிழில் என்றும் எங்கும் வழங்கும் பழமொழி.

'இன்றி யமையாச் சிறப்பின வாயினும் (மானம்)
குன்ற வருப விடல்.' 961 என்பது பொய்யில் புலவராம் வள்ளுவர் பொருளுரை. உயிரினங்களில் உயர்ந்தது மக்கட்பிறவி. உயிர் வகுப்புக்களில் மக்கள் மட்டுமே தம் பெருமை பேணுவர்: அதனழிவு நாணுவர். ஊன்றி நோக்கில், தன் மதிப்புக் குறைவு நாணும் மானமே மக்கட் பண்பு; உணர்வும் அறிவும் உயிர்களுக் கெல்லாம் ஏறக்குறையப் பொது உடைமை: தன்மதிப்பாம் மானம் ஒன்றே மக்களின் சிறப்பியல்பு. தன் மதிப்பில்லாத உயிர் வாழ்க்கை மற்ற விலங்குகளின் வாழ்வினின்றும் வேறுபடாது. உண்ணலும், உறங்கலும்- எண்ணலும், இயங்கலும்

எல்லா உயிர்களுக்கும் உண்டு. தன் மதிப்பு அல்லது மானம் குன்றாது காத்தல்; அது குறையில் வாழாதுயிர் நீத்தல், எனும் இயல்பு ஒன்றே மக்கள்தம் சிறப்பியல்பு.

'ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;
நாணுடைமை மாந்தர் சிறப்பு." 1012

தன் தகைமை தணியாமல் போற்றும் மானம், மனிதர் தற்பெருமை அன்று. வீண் பெருமை பழிக்கிடமாம். இறுமாப்பு, பொறுக்காது யாராலும் வெறுக்கப்படுவது.

சிறந்த மக்கட்பண்பாம் தன்மதிப்பு அல்லது மானம் எல்லார்க்கும் இன்றியமையாது வேண்டப்படும் சால்பாகும். மதிப்புக் குறைவை நாணுவதே சான்றோர் இயல்பாதலால், பழி நாணுவதே மானம் என்பாரும் உளர். நாணம் இல்லாதவரை மானமில்லாதவர் எனபது வழக்கன்றோ? இச் சீரிய சால்பாம் நாணுடைமை மாந்தர் சிறப்பியல்பாதலால், பழி நாணாக் கயவர் மக்கள் என மதிக்கப்படார்.

மாந்தரிடை பிற சால்புகள் குறையின், அவ்வவற்றால் ஒவ்வொரு கேடே நேரும். பழிநாணா மானக்கேடு எல்லாமும் கொல்லும். நாணிழந்து வாழாமை 'மானம்' ஆதலால், அது மாந்தர் சிறப்பியல்பு எனப்படுகிறது.

மானம், பொதுவாக மனிதசுபாவம்: பால் பெற்றி பற்றியதன்று. வீரம் ஆண்மைக்குணம், ஈரம் பெண்மைப் பண்பு. ஆணோ? பெண்ணோ? மனிதராய்ப் பிறந்தார் அனைவருக்கும் மானம் இன்றியமையாச் சிறப்பியல்பு. மானம் மக்கட் பண்பென்பது தமிழர் கொள்கை, அதனால் தமிழில் 'மானி' என்ற தனித்தமிழ்ச் சொல், பாலுருபு ஏலாது. அவன் மானி, அவள் மானி, எனப் பாலுருபு கொள்ளாமல் வாளாவரக் காண்கிறோம். இவ்வாறு சிறந்த இந்த மக்கள் பொதுப்

பண்பல்லாத பிறமனித இயல்புகள் குறிக்கும் எல்லாச் சொல்லும் பாலுருபேற்றே வரும்.

நல்லன்-நலலள்,
உடையன்-உடையள்,
சிவப்பன்-சவப்பி
என்று வேற்றுமை தோற்றப் பாலுருபேற்றே வரக்காணபாம்.

‘மானம்' தன்மதிப்பன்றி, செருக்கன்று. செருக்கு இறுமாப்பு; செம்மாக்கும் கீழோரின் கயமைக் குணம். அறனிழுக்காத் தன்மதிப்புக்கு 'மானம்' எனத் தமிழ்ப் பெயருண்மை ஒன்றே, தமிழருக்குத் தொன்று தொட்டு இப் பெருந்தக வுண்மைக்குச் சான்றாகும். மானம் எனும் பெருந்தகவு பீடழிய வந்தவிடத்து மக்கள் உயிர் நீப்பர்,

1. 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிரநீப்பர் மானம் வரின். -969

2. நாணால் உயிரைத்துறப்பர்; உயிர்ப் பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர். - 1017

அரசன் முதல் ஆண்டிவரை தமிழர் மானமிழந்து உயிர் வாழப் பொறார். அரசி சிலம்பை அபகரித்த தட்டான், தன் மனைவி காற் சிலம்பை விற்கவந்த கோவலனைப்' பாண்டிமா தேவி சிலம்பைத் திருடி விற்கக் கொணர்ந்தான் எனக் குற்றம் சாட்டக் கேட்ட பாண்டியன், உண்மை விசாரியாமல், கோவலனைக் கொல்வித்து, பிறகு

உண்மை விளங்கவும், மானம் பொறாமல் தன் உயிர் துறந்த செய்தி தமிழ்ப் பழங்காப்பியமான சிலப்பதிகாரத்தால் தெரிகிறோம். இன்றும் தமிழகத்தில் நிகழும் பல தற்கொலைகள் ஏழைகளும் மானம் இழந்துயிர் வாழா மக்கட் பண்புடைமைக்குச் சான்றாகும். மானம் தமிழர் தனிச் சிறப்பு, பிற மொழிகளில் அதற்குச் சரியான பெயர் காண்பதரிது, ஆங்கில 'ஆனர்' (Honour) கூட சிறிது வேறுபடும் பொருளுடைய தாதலை உற்று நோக்குவோர் உணர்வார்.

'மானமழிந்து பின் வாழாமை முன் இனிது'

என்பது தமிழ் முதுமொழி, (கொழும்பு திருக்குறள் கழகம் திசம்பர் 1955-ஆம் ஆண்டு வெளியிட்ட 'திருக்குறள் ஆராய்ச்சி' என்னும் கட்டுரைத் தொகுப்பில் இடம் பெற்றது.)

# மெய்ப்பொருள் காண்பது அறிவு

**திருக்குறளைச் சனாதனத்தின் கைப்பாவை எனப் பாராட்டுகிறார் சந்திரசேகரேந்திர சாமிகள்.வைதிகத்தை வேரறுக்க வந்த உலகப் பொதுமறை என்கிறார் ஆல்பர்ட்டு சுவைட்சர்**

வேதங்களிலும் , தர்மசாஸ்திரங்களிலும் , இதிகாஸ புராணங்களிலும் துலங்கும் தர்மங்கள் தெய்வப் புலமை திருவள்ளுவரது அழியாப்புகழ் பெற்ற திருக்குறளிலும் மிளிர்வதைக் காண்கிறோம் . மனிதன் தேவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை ,பித்ருக்களுக்குச் செய்யவேண்டிய கடமை , அதிதி பூஜை இவைகளும் , மறு பிறப்பும் , சுவர்க்க நரகங்களும் பார்ப்பார்க்குப் பிறப்பை யொட்டிய ஒழுக்கமும்,மறை ஓதல் முதலிய அறுதொழில்கள் , நான்கு ஆச்ரமங்கள் , யக்ஞங்கள் , யக்ஞங்களால் மழை சரிவரப் பொழிதல் , பதிவ்ரதா தர்மம் , கோ ஸாக்ஷணமும் , இவைகளுக் கெல்லாம் செங்கோலையுடைய க்ஷத்ரிய தர்மமும் , நேர்மை கோணாத வைச்ய தர்மமும் , பிறந்தோரெல்லோருக்கும் இன்றியமையாத பேரன்பாம் பகவத் பக்தியும்,அதன் பயனாம் பகவானுடைய லோகத்தைச் சேர்ந்து நீடூழி வாழ்தலும்,எல்லாப் பொருள்களுடைய காரணமான உண்மைநிலையான பரம் பொருளின் தத்வஞானத்தினால் அவித்யை என்னும் இருள் நீக்கி அழியா சிறப்பாம் மோக்ஷநிலையில் நிற்றலும் , இன்னும் அனேக விதமான தர்மங்களும் குறளைப் படிப்போருள்ளத்து பசுமரத்தாணி போல் பாய்வதைக் காண்கிறோம்.

காமகோடி கோசஸ்தானத்தில் வெளியிடப்படும் இப்பதிப்பில் இத்தகைய தர்மங்கள் மலிந்துநிற்கும் சில குறள்கள் தொகுக்கப்பட்டு முறையே இதே பொருள்களைக் கொண்டுள்ள சாஸ்திர வாக்கியங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன . இச்

திருவள்ளுவரின் சிந்தனைகளை இந்தியச் சிந்தனைகளுடன் ஒப்பிட்டு - குறிப்பாக, வேதம், சமணம், பவுத்தம், மனுநீதி, பகவத் கீதை போன்றவற்றுடன் ஒப்பிட்டு - ஆல்பர்ட் சுவைட்சர் எழுதி இருக்கும் கருத்துக்கள் சிறப்பானவை. “வாழ்வுக்கு உரிய அன்பு நெறியைக் கூறும் உயர்ந்த நூல். உயர்ந்த ஞானத்தைப் புகட்டும் செம்மொழிகளின் தொகுப்பு. இது போல் உலக இலக்கியத்தில் வேறு எங்கும் இல்லை” எனத் திருக்குறளை உளமாரப் போற்றும் சுவைட்சர், 'திருக்குறள் ஒப்புயர்வற்ற நூல்' என அறுதியிட்டு உரைக்கின்றார். திருவள்ளுவரிடம் ஆல்பர்ட் சுவைட்சர் காணும் சிறப்பு - உலக இலக்கியத்தில் வேறு எந்த அறநூலிலும், தத்துவ இயலிலும் காணப்படாத தனிப்பெருஞ் சிறப்பு - அவரது உடன்பாட்டுக் கொள்கை ஆகும்; உலகவாழ்வு பற்றிய எதிர்மறைச் சிந்தனையை - வள்ளுவரிடம் மருந்துக்கும் கூடக் காணமுடியாது.” என அறுதியிட்டு உரைக்கும் சுவைட்சர் 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்னும் தம் புகழ் பெற்ற நூலில் அவர் முப்பத்து மூன்று குறட்பாக்களை மேற்கோள் காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.(“Indian thought and its development” 200-2o8XIV. From the Bhagavad-Gita to Modern Times)

இந்தியாவில் வேதங்களும் உபநிடதங்களும் பிரமாணங்களும் சாத்திரங்களும் உலகவாழ்வை அற்பமாகக் கருதியும் வாழ்வுக்குப் பிந்தைய மறு உலகவாழ்வை மேலானதாகக் கருதியும் அமைந்திருத்தலைக் கண்ட சுவைட்சர் வையத்துள் வாழ்வாங்கு வாழுமாறு நெறிப்படுத்தும் குறளே சாலச் சிறந்தது எனப் போற்றினார்.

தரும சாத்திரங்கள் என இயற்றப்பட்டவை நால்வகைச் சாதிப் பாகுபாடு இறைவனால் உருவாக்கப்பட்டது எனக் கூறி நாலாம் வருணத்தை விலங்கினும் கீழாக விதித்து மனித இனத்தின் பெரும்பகுதியை அடிமைப்படுத்தி ஆளும் வருணதருமமே ‘தருமம்’ என வரையறுத்தன தருமசாத்திரங்கள் என்றும் தரும சூத்திரங்கள்

சாஸ்திர வசனங்களையும், அவைகளுக்குச் சரியான குறள்களையும் ஒப்பிட்டுப்பார்த்தல் ஒன்றிற்கொன்று அர்த்த புஷ்டியைக் கொடுத்துக்கொண்டு கலைஞர் களுக்குக் கலைச்சுவையைப் பெருக்குவது மாத்திர மல்லாமல் மனிதன் தானெடுத்த பிறப்பை எந்த முறையில் உபயோகப் படுத்திக் கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் தாழ்நிலை யெய்தாமல், இறுதியாக, இம்மையும் மறுமையுமற்ற ஞானநிலையில் அழிவும் அசைவுமற்ற நிறைவை யடையலாம் என்பதற்கு ஒரு வழித்துணை யாகவுமிருக்கிறது .

தமிழ் நாட்டில் பிறந்தவர்களெல்லோரும் இப் பெருநூலைத் துணைக்கொண்டு அறவழியே நடந்து,தம்தம் ஆத்மாவிற்கும், மரபிற்கும், நாட்டிற்கும் பெரும் சிறப்பைத் தேடியடைவார்களாக ஸ்ரீ சந்திர மௌளீச்வரர் சன்னிதானத்தில் பிரார்த்திக்கின்றோம். என

முகாம் : திருவிடைமருதூர்
சாலிவாகன சகாப்தம்
1872 , பால்குன
ஷஷ்டி - (23-2-50 ).
சுத்த நாராயண ஸ்மரணை

என்றும் வடமொழியில் வழங்கிவருவன அடிப்படை மனிதநீதிக்கே முரணானவை. வருண தருமப் பாகுபாட்டைச் சட்டமாகக் கொண்டு மனிதருள் பெரும் பக்தியினரை அடிமைப்படுத்தி வாழ்வதற்கு வழிவகுப்பன. சுவைட்சர் "மனுதரும சாத்திரம் பிராமணர்களால் பிராமணநலன்காக்க பிராமணர்களே வகுத்தளித்த சட்டம்" என்று மனுதரும சாத்திரத்தைப்பற்றிச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கிறார்.

வள்ளுவர் மனு இயற்றிய சட்டத்தை அடியோடு மறுத்துரைத்துச் சம நீதியையும் சமூக நலனையும் காக்க வழிவகுத்துள்ளார். மிஞ்சிய உணவையோ, கடவுளுக்குப் படைத்த படையலையோ சூத்திரனுக்குக் கொடுக்கக் கூடாது. சூத்திரனுக்குத் தவம் புரியும் உரிமையுமில்லை. அவனுக்குச் சமயச் சடங்குகளையும் விளக்கக்கூடாது. அறிவுரை கூட வழங்கக்கூடாது."(மனு:4-80) என்னும் மனுவின் கூற்றை எள்ளி நகையாடுவதைப் போன்று"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பியதாமே தமியர் உணல்—குறள்-229) என்று வள்ளுவர் மொழிந்துள்ளதைக் காண்க.

ஆசிரம தருமத்தில் முதல்நிலையாகிய பிரமச்சரியம் பேணுவோர் வீடுவீடாகச் சென்று பிச்சையெடுக்குமாறு அறிவுறுத்தும் மனுதருமம் அங்ஙனம் பிச்சையெடுத்தற்குரிய வழிமுறைகளையும் கூறுகிறது.நல்லாறு எனினும் கொளல் தீது மேல் உலகம்இல் எனினும் ஈதலே நன்று.(குறள்-222) எனக் கூறும் வள்ளுவர்ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்.குறள்-1066) என்று எவ்வகையிலும் இரத்தல் கூடாது என எச்சரிக்கிறார்.மனு, கீதை ஆகியவற்றுக்கும் வள்ளுவருக்கும் இடையிலான வேறுபாட்டை விரிவாக விளக்கும் சுவைட்சர் மானுடத்தின் மேன்மைக்கு வழிகாட்டும் ஆக்க நிலைக்கூறுகள் திருக்குறளில் அமைந்துள்ளமை போன்று வைதிகத்திலும் புத்தமதத்திலும் கீதை நெறியிலும் இல்லை என அறுதியிட்டுரைக்கிறார். ("Indian thought and its development" -Ethics in Indian Popular thought. The Kural 205)

# வறுமையை ஒழிக்க வலியுறுத்தும் வள்ளுவர்

-குன்றக்குடி அடிகளார்

---

*குன்றக்குடி அடிகளார் (சூலை 11, 1925 - ஏப்ரல் 15, 1995) சமயம், இலக்கியம், மட்டுமன்றி பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர்.*



*“இருபதாம் நூற்றாண்டின் சமய - சமுதாய ஞானியாகப் பாராட்டப் பெறுகிற தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் எதைச் சொன்னாலும் தெளிந்து சொல்வார் - தெளிவாகவும் சொல்வார். எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பதுபோல், தவத்திரு அடிகளார் அவர்களின் எழுத்தும் சொல்லும், சிந்தனையும் செயலும் மக்கள் சமுதாயத்தின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டே அமையும்” என முத்தமிழறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்டவர் குன்றக்குடி அடிகளார்*

*.உலகெங்கும் பொழிவு நிகழ்த்திக் குறள் பரப்பியவர்களுள் இவருக்கு முதன்மையிடம் வழங்கலாம்.பட்டிமன்றம் என்னும்  மேடை உத்தியைக் குறள் பரப்புதற்கென்றே பயன்படுத்திய தனிச்சிறப்பு இவர்க்கே உரியது.*

*பேச்சுக்கு நிகராக, எழுத்திலும் வல்லவரான அடிகளார், தம் வாழ்நாளில் ஏராளமான நூல்களை எழுதியதோடு, மணிமொழி, தமிழகம், அருளோசை முதலிய இதழ்களையும் நடத்தினார். அவர் ஆரம்பித்து, இன்றளவும் வந்துகொண்டிருக்கும் மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் ஆகிய இதழ்களும் குறிப்பிடத்தக்கன.*

---

சமுதாயத் தீமைகளில் முதன்மையானது நல்குரவு. நல்குரவு என்றால் வறுமை. அதாவது உண்பன உடுப்பன இன்றித் துன்புறுவது. ஒரு நாட்டில் நல்குரவு நிலவுவது அந்த நாட்டின் வளத்தைக் கெடுக்கும்; ஒழுக்கக் கேடுகளை உருவாக்கும்; பண்பாடுகளைச் சிதைக்கும். அதனால்தான் திருவள்ளுவர்,

“இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது” (குறள் 1041)

என்றார். வறுமை, இம்மை வாழ்வையும் கெடுக்கும்; மறுமை வாழ்வையும் கெடுக்கும்.

நல்குரவு பற்றித் திருவள்ளுவர் புது இலக்கணம் வகுக்கின்றார். இயல்பாக உள்ள வறுமை வேறு; ஆசை காரணமாக வரும் வறுமை வேறு. அதாவது வாழ்க்கைக்குத் தேவை இல்லாதனவற்றை விரும்பி அது கிடைக்காத நிலையை வறுமை என்று கருதி அழுது புலம்புவாரும் உண்டு. அதுபோலவே, ஒருவகை வறுமையினை வரவேற்கவும் செய்கின்றார். அறஞ்சார்ந்த வறுமையை வரவேற்கின்றார். அதாவது பிறருக்கு வழங்கிய வழி வந்த வறுமையைப் புண்ணியம் சார்ந்த வறுமை என்கிறார். புண்ணியம் சாராத வறுமையைத் தாயும் வேண்டாளாம். நெருப்பிற்குள் துரங்க இயலும், வறுமையுடன் கூடி வாழ்தல் அரிது என்று. வறுமையின் கொடுமையைக் கூறுகின்றார்.

இன்று நமது நாட்டில் வறுமையுற்று வாழ்வோர் 43% இருந்து வருகின்றனர். அதிலும் கிராமப்புற வறுமை கொடியது. கிராமப்புற வறுமையை அகற்ற நமது மாநில, மைய அரசுகள் பல திட்டங்கள் தீட்டின. ஆனால் அந்தத் திட்டங்களைப் பல மக்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை; சிலர் முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டனர். கிராமப் புற மக்களின் மனோநிலை - குணாம்சங்கள், பழக்க வழக்கங்கள் மாறினால்தான் கிராமப்புற வறுமை அகலும்! கிராமப்புற மக்களுக்கு வாழ்வியல் சார்ந்த அறிவியல், பொருளியல் அறிமுகப்படுத்தப்படவேண்டும். அது அவ்வளவு எளிதான காரியமல்ல. அவர்கள் “தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள்” என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; எளிதில் கேட்கமாட்டார்கள். ஆனாலும் போராடியாக வேண்டும். இது படித்த மனச்சாட்சியுடையோரின் கடமை.

வறுமைக்குப் பசி பயப்படுமா? வறுமையின் காரணமாக வயிற்றுப் பசி வராதா? உடலில் உயிர் உள்ள வரை பசிப்பிணி யகலாது. வயிற்றில் பசி. வீட்டில் வறுமை! என்ன செய்வான்? பிச்சையெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. அதனால் ‘நல்குரவு’ அதிகாரத்தைத் தொடர்ந்து ‘இரவு’ அதிகாரம் வைத்தார். இரந்து வாழ்தல் ஒரு வாழ்வா?

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்” (1062)

என்றது திருக்குறள். ஆனால் திருவள்ளுவர் இரத்தலையும் முழுமையாக விலக்கிப் பேசாதது ஏன் என்பது ஆய்வுக்குரிய செய்தி. மானுட வாழ்க்கையில் எந்தச் சூழ்நிலையிலும் இரத்தல் வராமல் போகாது என்று எண்ணினாரா? அங்ஙணமாயின் வறுமை காரணமாக இல்லாமல் பிற காரணங்களுக்காக ஒருவரிடம் கேட்டுப் பெறுதலை இரத்தல் என்று கூறுவானேன்? உதவிக்குள் அதனை அடக்கக் கூடாதா? அறிஞர்கள் ஆராய்க. இரவு அதிகாரத்தில் இரவின் இழிவையே திருவள்ளுவர் கூறவில்லை. அதற்கு மாறாக “ஈவான்ரப் பார்த்து இரக்க!” என்றும் “கரப்பாரிடம் இரக்கம் வேண்டாம்" என்றும் கூறுகின்றார். ஏன்? "இரத்தலும் ஈதலே போலும்" என்றுகூடக் கூறிவிட்டார்.

இரவச்சம் அதிகாரத்தில்தான் இரவின் இழிவு பற்றிப் பேசுகின்றார். இரவச்சம் அதிகாரத்தில்,

"கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்"(1061)

என்று கூறுகின்றார். ஆனால் இரவு அதிகாரத்தில்,

"கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்புமோர் ஏஎர் உடைத்து"(1053)

என்று கூறுகின்றார். இது என்ன? முன்னுக்குப்பின் முரணா? அல்லது இயல்பாய தேவைகளுக்கு அல்லது அறஞ்சார்ந்த வறுமைக்குத் தந்த விதிவிலக்கா? அறஞ்சார்ந்த வறுமைக்குத் தந்த விதிவிலக்கு அதிகாரமே இரவு.

மக்கட் சமுதாயம் இரந்து வாழும் நிலையில் வாழின், அந்த நாட்டில் அரசு இருந்து என்ன பயன்? கடவுட் கோயில்கள் இருந்து என்ன பயன் திருவள்ளுவருக்குக் கோபமே வருகிறது.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"(1062)

என்று பேசுகிறார்.

திருவள்ளுவர் நல்ல மக்கட் சமுதாயத்தைப் படைத்து உருவாக்கவே திருக்குறள் இயற்றினார். ஆயினும் அவரால் அது முடிந்ததா? முடியவில்லை என்பதே வரலாற்று முடிவு. அதுமட்டுமல்ல, திருக்குறளின் முடிவும் கூட ஏன் எனில், திருக்குறட் பொருட்பாலின் கடைசி அதிகாரம் கயமை. அரசு, நட்பு, பெரியோர், சால்புடையோர் இவ்வளவு பேர் முயன்றும் திருத்த முடியாத கயவர்கள் என்றும் சமுதாயத்தில் இருப்பர் என்று திருவள்ளுவர் நம்புகின்றார். ஆம்! உண்மை! நமது சொந்த அனுபவமும் கூட! நாம் என்னதான் பரிவு காட்டினாலும் குடும்பத்தையே கட்டி வளைத்துச் சோறு போட்டாலும்கூட, ஆயிரம் தடவை புத்திமதி சொன்னாலும்கூட கேட்காமல் குடித்துச் சீரழிபவர்கள் பலர்! சின்னத்தனங்களும் அராஜகங்களும் செய்தல், நன்றி மறத்தல், பிறருடைய பொறுமையை - மன்னிக்கும் மனப்போக்கை அலட்சியமாக - பயந்தாங்கொள்ளித் தனமாக நினைத்தல் ஆகிய தீய பழக்கங்களிலிருந்து மீள முடியாமல் தவிப்பவர் பலர். திருவள்ளுவரே விரக்தியுடன்,

"ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்" (848)

என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கயவர்கள் வாழ்ந்திருக்கின்றனர்; வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இத்தகு கயவர்கள் "கரும்புபோல் கொல்லவே பயன்படுவர்" என்பது திருவள்ளுவர் கருத்து. கயவர்கள் தம்மைச் சில காசுகளுக்கு விற்றுவிட்டு வெட்கமின்றி நன்றிகெட்ட செயல்களைச் செய்வர்.

அண்மைக் காலமாக நமது நாட்டில் இந்தக் கயமைக் கூட்டம் பெருகி வளர்ந்து வருகிறது என்பது உண்மை. கயமைக் கூட்டத்தை அறவே ஒழித்தால்தான் வீட்டில் அமைதி, உலகில் அமைதி. இந்தப் பணி எப்போது நடக்கும்:

காரைக்குடி மெய்யம்மை பதிப்பகம் (இராமசாமி தமிழ்க்கல்லூரி)
20.2.95 நாளிலாற்றிய 13ஆவது ஆண்டு மீனாட்சி ஆச்சி நினைவுச் சொற்பொழிவின் ஒரு பகுதி.